*KALAM - International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*13(1), 2020*

# கல்வி மெய்யியல் நோக்கில் அழகியற் கல்விசார்ந்த பிரச்சினைகள்: ஒரு பார்வை

**க. கணேசராஜா**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**சமூக விஞ்ஞானங்கள் துறை**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**

Correspondence: drkanesraj@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

அழகியல் மெய்யியலின் பிரதான ஒரு பகுதியாகும். இத்துறை நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும். அழகு என்றால் என்ன? கலைஎன்றால் என்ன? ரசித்தல் எத்தகையது? ஏன் அழகியல் உணர்வு அவசியம்? ஏன் அழகியற் கல்வி அவசியம்? கீழைத்தேய அழகியல் படைப்புக்கும் மேலைத்தேய அழகியல் படைப்புக்கும் தொடர்புள்ளதா? அல்லது வேறுபாடானதா? போன்ற பல வினாக்கள் அழகியல் மெய்யியலில் அலசப்படுகிறது. மனிதர்கள் ஒவ்வொரு வருக்கும் ஏதோ ஒருவகையில் அழகியல் உணர்வு காணப்படுகிறது. 'இசையால் வசமாகா இதயம் உண்டா' என்று ஒரு கவிஞன் கூறுகின்றான். இன்னும் ஒரு கவிஞ்ஞன் 'வண்ணத்துப் பூச்சி உடம்பில் ஓவியங்கள் அதிசயம்' என்றான். இந்த வரிகள் அழகியல் உணர்வின் வெளிப்பாடாகக் கொள்ள முடிகிறது. அழகியல் படைப்புக்களால் மனிதனும் சமூகமும் விருத்தியுறுகிறது என உளவியலாளர்களும் இரசனையியலாளர்களும் குறிப்பிடுகின்றனர். இன்றைய சூழ்நிலையை ஆராயும் போது சமூகவியல், மானிடவியல், கலாசார துறைகளின் மத்தியில் சமூகத்தில் அழகியற் கல்வியின் நிலை எவ்வாறு உள்ளது. அழகியற் துறையை வளர்க்க விரும்பும் போது மறுபுறமாக தொழில்நுட்பக் கல்வியின் காரணமாக சமூக, கலாசார செயற்பாட்டுக்கு அழகியல்,கலை போன்றவற்றின் பங்களிப்பு குறைகிறது. அழகிய மெய்யியலில் பல புதிய அர்த்தங்கள், நோக்கங்கள், பிரயோ கங்கள் உருவாக்குகின்ற வேளையில் அது அழகியல் இருப்புக்கும், அழகியல் கல்விக்கும் சவாலாக அமைகின்றது. அதேநேரம் இத்தகைய அழகியல் துறையும் அழகியல் கல்வியும் இன்று எவ்வாறு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் காணப்படுகிறது என்பதை ஆராய்வதாக இவ் ஆய்வு அமைகின்றது. பண்பு அடிப்படையில் அமைந்த இவ் ஆய்வில் விபரிப்பு முறை, விளக்கமுறை, பகுப்பாய்வு முறை போன்ற முறையியல்களை அடிப்படையாகக் கொண்டதோடு நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளத் தகவல்கள் போன்றன இரண்டாம் நிலைத்தரவுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பிரதான சொற்கள்:** கலை, அழகியல் உணர்வு, மகிழ்வானவாழ்வு, இரசித்தல், தெழில்நுட்பக்கல்வி

## 1. அறிமுகம்

அழகியல் என்பது ''கண்டுணர்தல்'' என்று பொருள்படும். இது உணர்வுசார்ந்த சிந்தனையாகும். அழகியல் எனும் சொல் ஆங்கிலத்தில் Aesthetics என்று அழைக்கப்படுகின்றது. இது Aesthetikos எனும் கிரேக்கச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றது. இது உணர்ச்சி, புலன்களின் வாயிலாக உணரும் திறன் என்று பொருள் கொள்ளலாம். அழகியல் நீண்ட வரலாற்றைக் கொண்டதுறையாகும். இத்துறை கலைகளின் மெய்யியல் அல்லது அழகியற்கலை அல்லது அழகியல் விழுமியங்கள் பற்றிய பிரச்சினைகளை ஆராய்கின்றது. அழகியல் தீர்ப்புக்களின் மூலம், அதன் ஏற்புடைமை பற்றி அறிய முயலுகிறது. கலைப் படைப்புக்களின் உண்மைத் தன்மை

என்ன?, அதன் அர்த்தம் யாது?, போலிக்கலைகளில் இருந்து சரியான கலையை எவ்வாறு வேறுபடுத்துவது போலிக் கலைஞர்களை எவ்வாறு தவிர்ப்பது போன்ற பல விடயங்களை இத்துறை ஆராய்கின்றது. உண்மை, நன்மை, அழகு என்பவற்றை உள்ளடக்கிய அழகியல், ஒழுக்கத்தையும் அறிவையும் தன்னுள் கொண்டுள்ளது என்று பிளேட்டோ குறிப்பிட்டார் (குடியரசு,1966). இருந்த போதிலும் அக்கருத்து மெய்யியல், கல்வியியல் ஆகிய இரு துறைகளிலும் இன்று குறைந்த கவனத்தையே பெற்றுள்ளது. இதற்கு கடந்த காலங்களில் முழு அளவில் அழகியற் கல்வி பற்றிக் கூறும் நூல்கள் அதிகம் வெளி வரவில்லை என்பது குறிப்பிட்டுக் கூறக்கூடிய விடயமாகும்.

ஆயினும் அவ்வப் போது கல்வியியல் சார் தத்துவஞானிகள் சிலர் பிரதானமாக ஒழுக்க கல்விக்கும் அழகியல் கல்விக்கும் இடையிலான தொடர்பு பற்றி சில கட்டுரைகளை வெளியிட்டு வந்துள்ளனர் என்பது இங்கே கவனிக்கத்தக்கது (Levinson, 2003). அதேநேரம் அழகியல் மெய்யியல் (Aesthetical Philosophers) சார்ந்த எழுத்தாளர்கள் கல்வி பற்றி எந்த ஈடுபாடும் காட்டியதாக தெரியவில்லை. அழகியற்கல்வி தொடர்பான உரையாடல்கள் என்ற (Journal of Aesthetics Education Discusses) இதழ் தனது இறுதிப் பகுதியில் கல்வியை நடைமுறைப்படுத்தும் போது எழும் பிரச்சினைகளைப் பற்றி சுருக்கமாக விவாதித்து வருகிறது.

இவற்றுக்கு மாறாக அண்மைக் காலத்தில் விசேட பாடங்களோடு சம்பந்தப்பட்ட (உதாரணமாக இசைத்துறை) கல்வியியாளர்கள் மெய்யியல் பிரச்சினைகளில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இவர்களில் அனேகர் ஆசிரியர்களாக உள்ளதால் பாடசாலையில் கலைகளை கற்பிப்பது பற்றி அதிகம் கவனம் செலுத்துகின்றனர். அவர்கள் இசை, காண்பியக் கலைகள், இலக்கியம் பற்றி எழுதி வருகிறார்கள். அவர்கள் மேலும் நடைமுறையில் மெய்யியலைக் கற்பித்தல், கல்விக் கொள்கைகள், உளவியல் சார்ந்த கேள்விகளை அவர்கள் கேட்கிறார்கள். அழகியற் கல்வியின் தற்கால நிலையைப் பற்றிப் பேச முயலும் போது அதை கலை, அழகியல் பற்றி கூறப்படும் வரைவிலக்கணங்கள் முக்கியம் பெறுகிறது.

## 2. ஆய்வின் அடிப்படை

பொதுவாக கலை என்பதற்கு விளக்கம் கூற முயலும் போது அழகு என்பதனையும் அதனுடன் இணைந்தே விளக்கம் கூறப்படுகின்றது. கலைப்பொருட்களில் இருந்து பெறுவது அழகாகும். காட்சியினாலும் கற்பனையினாலும் பெறக்கூடிய அனுபவமென சாதாரண மக்கள் கருதுகின்றனர். கலை, அழகு, அதன் நோக்கம், ரசனை, உணர்ச்சி போன்ற பல்வேறு விடயங்கள் இதில் இடம் பெறுவது தவிர்க்க முடியாததாகும்.தமிழில் அழகு என்பதற்கு அம்மை, அழி, எழில், முருகு, கவின், திரு, பொலிவு, பொற்ற, வனப்பு என்று பல சொற்கள் உண்டு. அழகினைத் தொகுத்தும், திரட்டியும் காண்பதற்கு தொல்காப்பியம் முதல் கொண்டு பல நூல்களில் குறிப்புக்கள் உண்டு. திருக்கோவையாரின் உரைகாரர் திருவுக்கு மூன்று பண்பு நிலைகளை விளக்குகிறார். அவை உரு, நலன், ஒளி என்பனவாகும்.

மேலைநாடுகளிலும் கூட அழகியல் என்பது தத்துவத்தின் ஒரு கொள்கையை விளக்கும் கலைச் சொல்லாக பயன்படுத்துகிறது. அங்கு இது 18ம் நூற்றாண்டில் முதன் முதலில் ''அலைக்ஸ்சான்டர் கோட்லீப் பாம் சார்த்தான்'' என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. அழகியல் வரலாற்றை மூன்று பெருந் தொகுதியாக வெளியிட்டவர் புகழ்பெற்ற போலந்திய அறிஞர் வினாறிஸ்லான் தாதர் கேவிட்ச் ஆவார். இத்தாலியின் மறுமலர்ச்சிக் காலத்துத் தத்துவஞானியும் அழகியலாளரும் மார்க்சிலோ, பிசிநோ உலகின் அடிப்படைப் பண்புகளுக்கு அழகியல் முறையிலான விளக்கம் தருகிறபோது மூன்று கருத்து நிலையை முன் வைப்பார். கவர்ச்சி, நிறைவு, விரும்பம் இவை அழகியலின் செயற்பாட்டை விளக்குவன. இயற்கை, செயற்கைப் பொருட்களிலும் இது காணப்படலாம். மலை, நதி, மயில் போன்றவை அழகாய்த் தோன்றலாம். இவ்வாறே சிலைகள், ஓவியம் போன்றனவும் அழகாய்த் தோன்றலாம். ஏதாவது ஒன்றை நாம் அழகானது என்று கூறும் போது அந்த அழகைப் பார்க்கும் விடயத்தைச் சேர்ந்ததா அல்லது விடையினைச் சேர்ந்ததா என்பது பிரச்சினையாகும். அது விடையினைச் சேர்ந்தது எனக் கூறினால் அவனது கண்களில் தங்கி உள்ளதா? என்பதும், எனக்கு

அழகாக இருப்பது ஏன் மற்றவர்களுக்கு அழகாக இல்லை என்பது போன்ற கேள்விகள் உருவாகும். உண்மையில் அழகு என்பது அவரவர் மனநிலையைப் போன்றதாகும்.

அழகும், அழகு பற்றிய ஆராய்ச்சிகளும் மேற்கு மரபிலும், கீழைத்தேச மரபிலும் வளர்ந்துள்ளன. இது "டெமோகிரட்டிஸ், நெஸ்கன்குட்மான், அரிஸ்ரோட்டிஸ், பிளேட்டோ, அக்குவனஸ், கீட், கொலின்வூட், ரோல்ஸ்ரோஸ் சிக்மன்புறைட், ரவீந்திரநாத் தாகூர், ஆனந்தகுமாரசுவாமி, ராஜாராம், லிக்கன்டைன் போன்ற அறிஞர்கள் இரசனையியல் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கக் கூடியவர்களாகும்.

*இவர்களது பார்வையில் அழகும் கலையும் ஒன்றோடொன்று தொடர்புடை யவைகளாக உள்ளன. அழகியலின் எல்லைகள் கலையோடு சமாந்தரமாக இருக்கின்ற போதில் கலை அழகியல் நயத்தலின் மையமாக உள்ளது. இருந்த போதிலும் கலையும் அழகியலும் ஒரு இடத்தில் இருப்பவை அல்ல. இயற்கையின் தோற்றங்களும் எல்லா வகை செய்பொருட்களும் அழகியல் நோக்கில் கலைத் தன்மை கொண்டவையோ அழகியலை வெளிப்படுத்துவது அல்ல. கலை இரண்டு அம்சங்களை கொண்டது. ஒன்று ஒரு குறித்த இயல்பை அல்லது பாவத்தை அல்லது அம்சத்தை வெளிப்படுத்துதல். இரண்டு ஒரு குறிப்பிட்ட மனோபாவம், அறிவுணர்வை அல்லது அனுபவத்தை வெளிப்படுத்தல் (Levinson, 2003) மேலும் கலை அடிப்படையில் சில வகை செயற்பாட்டை, அல்லது பொருளைக் கொண்டது. அதை அழகியல் நோக்கில் மாத்திரமல்லாது சமூக, அரசியல், சமய, போதனை மற்றும் பொருளாதார நோக்கிலும் ஆராயலாம்.*

## 3. அழகியல் (Aesthetics)

*அழகியல் எண்ணக்கருக்களில் கலை பற்றிய விடயம் குறைந்த அளவே விவாதிக்கப்பட்டுள்ளது. அழகியல் என்ற சொல்லுக்கு ஒரு பொருளின் மீது உணர்வு பூர்வ ஈடுபாடு என்று அர்த்தமாகும். அழகியல் புறரீதியானது, உள்ளார்ந்தது என்ற இரு பிரிவுகளை உடையது என்று 'வோல்கங் வேல்ஸ்' குறிப்பிடுகிறார். முதலாவது அறிவுடன் தொடர்புடையது. முற்றது உணர்வு, மகிழ்வுடன் தொடர்புடையது அழகியல் மகிழ்ச்சி என்பது எங்கள் தேவைகள் நிறைவேறியதால் வரும் திருப்திவிட உயர்வான ஒன்றாகும். உதாரணமாக வெப்பமான நாட்களில் குளிர் பானத்தை அருந்தியதால் ஏற்படும் திருப்தியை விட மேலானதே அழகியல் மகிழ்ச்சியாகும். அது அழகுடன், ஒருங்கிணைவுடன், நுட்பத்துடன் இணைந்து உயர்ந்த நிலையில் உள்ளதாகும், அது பயன்பாட்டுத் தன்மை கொண்டதல்ல. அறிதல் தொடர்பில் அழகியல் பொருளின் மூலகங்களுடன் சம்பந்தப்பட்டது. (Welsch, 1997) இங்கே வடிவம், அளவு என்பன முக்கியம் பெறுகின்றன.*

*இந்த வழியில் வெல்ஸ்ச் அழகியல் பற்றிய கருத்துரையாடலின் முக்கிய எண்ணக்கருக்களாக, உணர்வு, அறிதல், உணர்ச்சி, மகிழ்ச்சி, வடிவம், விகிதம் இவற்றிலிருந்தே அழகியல் மகிழ்ச்சி வெளிப்படுகிறது. இந்த கருதுகோள்களுக்கு இடையிலான தொடர்பின் வலைப்பின்னலை அவிழ்த்து பார்க்க வெல்ஸ்சின் அணுகுமுறை முயல்கிறது. அழகியலின் அவசியத்தை வரையறுப்பதிலும் பார்க்க அது பிரயோசனமானது. ஏனென்றால் அவ்வாறான வரைவிலக்கணத்தை எய்துதல் சந்தேகமானது.*

*அழகியல் எண்ணக்கரு அழகியலின் எல்லையை வர்ணிக்க போதியதல்ல. பாரம்பரியமாக அழகியலின் இரு பண்புகளாக துய்மையும் கவர்ச்சியும் கொள்ளப்படுகின்றன. அதை எதிர்மறையாக அளவிட அழுக்கு, வெறுப்பு, போன்ற அளவுகோல்களை கருதுகின்றனர். ஒரு பக்கமாக இந்த மாற்று அளவுகோல்கள் அழகியல் பரப்புக்குள் அழகின் இடத்தை வரையறுக்க உதவுமா என்பது சந்தேகத்துக்குரியது (ஞானகுமாரன்,நா.2012). அழகின் உதாரணங்கள் மூலம் ஒருவர் அழகியல் உணர்வை பெற முடியும் மாறாக அழகியல் அனுபவத்தை குறைத்தலுக்கு அல்லது மறுப்பதற்கு எதிரான கலை கல்விக் கோட்பாட்டாளர்கள் கடந்த நூற்றாண்டின் இரண்டாவது காலப்பகுதியில் இருந்து கலை அனுபவத்தை முக்கிய விடயமாகக் கருதி அதனை விளக்கியுள்ளனர்.*

## 4. அழகியல் படைப்புக்கள்

*1950* வரையும் கலை சில கருத்தியல் சாரங்களின் அடிப்படையில் எடுத்துக்கூறப்பட்டது. புராதன காலத்திலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டு வரை பாவனையோடு தொடர்புடைய சொற்களை கொண்டு அது விபரிக்கப்பட்டது. கலை இயற்கையை பாவனை செய்வது என்று விளங்கிக் கொள்ளப்பட்டது. அதன் நவீன பிரதியில், சுருக்கமாக, பாவனைக்கு பதிலாக பிரதிபலிப்பு என்று மாற்றப்பட்டுள்ளது (Copy to Copy). உண்மையில் எல்லாத் தோற்றங்களினதும் பிரதி அல்லது பாவனை தான் ஓவியங்களாக, சிற்பங்களாக, இலக்கியங்களாக, நாடகங்களாக, திரைப்படங்களாக வடிவெடுக்கிறது என்று கருதப்பட்டது. ஆயினும் பல கலைப் படைப்புகள், குறிப்பாக உருவவமற்ற கலைகள், இசை மற்றும் பயன்பாட்டுக் கட்டிடங்கள் போன்றவை பாவனையை அல்லது பிரதிபலிப்பை அடிப்படையாக கொண்டவை அல்ல. இதனால் பாவனை அல்லது பிரதிபலிப்பு கலையில் முழுமுதல் அம்சம் என்ற சிந்தனை கேள்விக்குரியதாகிறது. பிரதிபலித்தல் கோட்பாடு தெளிவற்ற தன்மையை அடைகிறது. இது வெளித்தோற்றத்தின் பிரதிபலிப்பா மனத்தில் உள் தோற்றமா என்பது தெளிவாகவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டு கோட்பாடுகள் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய வெளிப்பாட்டு கோட்பாடின் பாதிப்புக்கு உள்ளானவையாகும். அவை தெளிவாக கலைகள் உணர்வெழுச்சியின் வெளிப்பாடு என்கிறது. கலைப் படைப்பின் முக்கிய அம்சத்தை வெளிப்பாட்டு கோட்பாடு வெளிப்படுத்து கிறதெனினும் அது கலையின் வெளி யதார்த்தத்தையோ அதன் முக்கிய அம்சத்தையோ வெளிப்படுத்தவில்லை. மனவெழுச்சியைச் சாதாரணமாகக் காட்டும் பல கலைப் படைப்புகள் உள்ளன. அவை கலைகளுக்கு மனவெழுச்சி அவசியம் என்ற கூற்றை பொய்ப்பிக்கின்றன. இதற்குப் பிற்பாடு

உருவக் கோட்பாடு கலையை வடிவ அமைப்பை வரையறுக்கிறது. சி. ஈ ஹாஸ்லிக் என்பவர் (Hanslick,1854) இசை, விமர்சகரால் உருவாக்கப்பட்ட உருவக் கோட்பாட்டினை கலை விமர்சகர் சிலிவ் பெல் (Bell, *1914*) என்பவரால் சரியான கலைக் கோட்பாடாக வளர்க்கப்பட்டது. கட்டமைப்பு, சமநிலை, வடிவ அமைப்பு போன்றவற்றின் விளைவுதான் கலைப் படைப்புகள் என்று வாதிக்கும் உருவக் கோட்பாட்டாளர்கள் பாவனை அல்லது பிரதிபலிப்பை மறுதலிக்கிறார்கள். அப்படி என்றால் கலை வடிவத்தையும் சாதாரண வடிவத்தையும் எவ்வாறு வேறுபடுத்துவது?. இவ்வாறான கலைக் கோட்பாடுகள் கலையின் உள்ளகத்தை வரையறுப்பதில் தோல்வியடைகின்றதாயினும் அதை மதிப்பீடு செய்யவும் விபரிக்கவும் ஏற்ற பிரமாணங்களாகவும் அமைகின்றன. உண்மையில் பெரும்பாலான கலைப்படைப்புகளின் மதிப்பும் நயமும் அவற்றின் வடிவத்தில் அல்லது உள்ளடக்கத்தில் அல்லது இந்த இரு அம்சங்களின் இணைப்பிலும் அமைந்துள்ளன. இதே தன்மையைக் கொண்ட மாற்று கொள்கைகள் நாடகம் குறியீட்டு அமைப்பு (Goodman, *1776*) பிரச்சினைக்குத் தீர்வு காணுதல், அழகியல் அனுபவம் என்பனவாகும். அவை கலையின் பெறுமதியை மேலதிகமாக சுட்டுகின்றன.

பயன்பாட்டு கலைப் படைப்புகள் யாவற்றிலும் உள்ளார்ந்துள்ள அடிப்படை அம்சங்களை அடையாளம் காணும் வரைவை இனம் காண ஸ்டிபன் டேவிஸ் முற்படுகிறார். பயன்பாட்டு வரைவிலக்கணம் கலை செய்யும் பணிகளிலிருந்து அதை வரையறுக்க முயல்கிறது. இதற்கு மாறாக ஆக்கப் படி முறை சார்ந்த நோக்கு கலை எவ்வாறு ஆக்கப்பட்டுள்ளது என்ற வகையில் அதை வரையறுக்கிறது. இந்த வகை நோக்குக்கு நல்ல உதாரணம் ஜோர்ஜ் டீக்கியின் நிறுவனமய கொள்கையாகும். அது கூறுகிறது, 'கலை உலகுக்கு வழங்கும் செய்பொருளே கலைப் பொருளாகும்.' (Dickie, *1992*). மேலும் கலையை செயல்பாட்டு அல்லது செயல்முறை வழியாக அல்லாமல் வரலாற்று வழியாக வரையறுக்க முயல்கிறது. ஜேரோல்ட் லெவிங்டன் (*1990*) ஒரு பொருள் கலைப் படைப்பு என்று படைக்கப்படுவது அதாவது முன்னர் உள்ள பாணியில் படைக்கப்படுவது கலை என்று வரையறுக்கிறார். இந்த வரையறை கலையை எவ்வாறு அணுகுகிறோம் என்பதையும் கடந்த காலத்தில் கலைகள் எவ்வாறு படைக்கப்பட்டன என்பதையும் வலியுறுத்துகிறது. இந்த வரையறையின் பிரச்சினை என்னவென்றால் கலைஞனின் நோக்கம் ஏற்கெனவே திட்டமிடப்பட்டதா, சரியான கலை ஆக்கங்களை கலை அல்லாதவற்றிலிருந்து எவ்வாறு வேறுபடுத்துவது என்பதாகும்.

டிக்கியின் நிறுவனமயப்பட்ட வரையறையும் லெவிங்டனின் வரலாற்று வரையறையும் கலை பாவனை கொண்டதா, வெளிப்பாடு கொண்டதா, வடிவ அமைதி கொண்டதா குறியீடு கொண்டதா என்பதை நேரடியாக சுட்டிக்காட்டவில்லை. ஆயினும் அவை கலைக் கல்வியின் முக்கிய அளவீடுகளில் எங்கள் கவனத்தை திருப்புகிறது. குலைக் கல்வி சமூக, வரலாற்று அமைப்பில் கலையின் பிரயோகத்தை விளக்க முற்படுகிறது.

### 5. அழகியல் கல்வியும் பாடசாலையும்

கடந்த காலங்களில் அழகியல் கல்வி வளமான ஒன்றிணைந்த அழகியல் அனுபவத்தை விருத்தி செய்ததாக கருதப்பட்டது. அழகியல் கல்வியின் மூலம் உணர்வு, அறிதல், சிறப்பியல்பு என்பனவற்றில் கவனம் செலுத்துகின்றன. 1960 இல் இருந்து 1980 வரை வழமையான கல்வியில் அழகியற்கற்கை பல்வேறுவகையாகப் பாதிக்கப்பட்டது. கலை பிரத்தியேகமாக சிறுவர்கள் தங்கள் உணர்ச்சிப் பெருக்கை வெளிப்படுத்த ஏற்ற சாதனமாக கொள்ளப்பட்டது (மீனாட்சி முருகரெத்தினம், 1992). ஒருவன் கலை உத்தியை அறிந்து கொள்வதிலும் பார்க்க தனது உணர்வுகளை வெளிப்படுத்த பழகுவது முக்கியமானது. இந்த நோக்கு முதல் நிலை, இரண்டாம் நிலை கல்வியில் பாரிய பாதிப்பை செலுத்தினாலும் கலைக் கல்வி பற்றிய கோட்பாட்டாளர்கள் இதை பலமாக எதிர்க்கின்றனர். கலைப்படைப்புகள் ஒரு போதும் தன்னிச்சையான உணர்வெளிச்சியின் வெளிப்பாடு அல்ல என்று ரெய்மர் என்ற அழகியலாளர் விவாதித்தார். கலைப் படைப்புகளை உருவாக்குவதற்கு அவற்றின் செயல்முறை முக்கியமானது. அதற்கு உணர்ச்சி வெளிப்பாட்டைவிட சிந்தனையை கட்டுப்படுத்தல் அவசியமானது.

ஆழகியற் கல்வி சுயவெளிப்பாடு என்பதை மறுக்கும் 'ரேய்மர்' கலை உணர்வைக் கற்பிக்கும் என்பதை ஏற்றுக்கொள்கிறார். அவரை தொடர்ந்து சுசுன்னே லங்கர் (Suzanne Langer) உணர்ச்சி இயக்கப் பண்பு கொண்டதென்றும் உடலியல் செயற்பாடென்றும் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு தருணத்திலும் எங்கள் உணர்வு வளர்கிறது, மாறுகிறது, தேய்கிறது. உச்சத்தை அடைந்து பின்னர் தளர்கிறது. இந்த உணர்வை மொழியால் எடுத்துக்காட்ட முடியும். ஆயினும் அதன் இயற்கைத் தோற்றத்தை விபரிக்க முடியாது. அதை கலை சிறப்புற செய்ய முடியும். அதை கோட்பாடாக்கி விபரிப்பதைவிட சிறப்பாக கலைகள் வெளிப்படுத்துகிறது. எங்கள் நாளாந்த வாழ்க்கையில் ஒழுங்கற்ற பாங்கில் வெளிப்படும் உணர்ச்சியை கலை ஓர் ஒழுங்கான முறையில் வெளிப்படுத்துகிறது. கலை ஆழமான அடிப்படையில் அற்புதமாக உணர்வை வெளிப்படுத்திக் கொள்கிறது. இந்த வகையில் மனித உணர்ச்சியை கலை ஆழ்ந்த முறையில் நயக்கிறது எனலாம்.

### 6. குறியீட்டு கலை அமைப்பு

தோற்றங்களை நேரடியாக அறிதலைவிட குறியீட்டு பாங்காக கலை உணர்த்துகிறது என்று நெல்சன் குட்மான் கருதுகிறார் (Nalsman, 1976). அவர் அழகியல் குறியீடுகளில் ஐந்து தன்மைகளை அடையாளம் காணலாம் என்கிறார். அவை:

1. சொல்லியல் அடர்த்தி (அமைப்பின் அடர்த்தி): சில இயல்புகளில் (நிறம், அசைவு, சத்தம் என்பவற்றில்) காணப்படும் நுண்ணிய வேறுபாடு. கலைக் குறியீடுகளில் வித்தியாசங்கள்.

2. சொல்லியல் அடர்த்தி (அர்த்தத்தின் அடர்த்தி): அர்த்தத்தின் நுண்ணிய வேறுபாட்டை குறிக்க குறியீடு பயன்படுகிறது. சொல்லமைப்பின் நுண்ணிய வேறுபாட்டை கலை வெளிப்படுத்துகிறது.

3. ஒப்பீட்டளவில் பூரணமானது. கலையின் குறியீடுகள் முக்கியமானவை. கலைப் படைப்புகள் பொருள் நிறைந்தவை.

4. பல்வகை குறிப்புகள்: வாழ்க்கை பல வகை பொருட்களால் குறிக்கப்படும் (பூக்கள், பழங்கள்) சில வேளைகளில் அது செல்வம், மாற்றம், பெருமை, கலைப்பணி என்பவற்றாலும் குறிக்கப்படும்

5. உதாரணங்களாகுதல்: கலை பணிகள் சில பிரத்தியேக பண்புகளை தேர்ந்தெடுக்கிறது.(உதாரணமாக அழகு, சீர்மை போன்றவைகள்) கலைப் படைப்புகள் துயரம், மகிழ்ச்சி, நம்பிக்கை என்பனவற்றை வெளிப்படுத்துவது. அந்த வெளிப்பாடுகள் முறைமை சார்ந்தவை என்பதை குட்மான் கருதுகிறார்.

## 7. அறிதல் வளர்ச்சியாக அழகியல் கல்வி

அறிவை அறிதல், நுண்ணறிவு பெறல், ஞானம் ஆகிய பல்வேறு அறிதல் செயற்பாடுகளை கலை உயர்த்தும் கைங்கரியத்தை புரியும் என்று கருதப்படுகிறது. ஹரோல்ட் ஒப்ஸ்போன் கலையின் முக்கிய பணி நேரடியாக அறிதலை தூண்டுவதாகும் அல்லது விரைந்து அறிய உதவுவதாகும் என்று கூறுகிறார். நாம் கலையில் ஈடுபடும் போதெல்லாம் எங்களுடைய மட்டுப்படுத்தப்பட்ட புலன் உணர்வுகளால் வழிநடத்தப்படுகிறோம். அப்புலன் கட்டமைக்கப்பட்ட தன்மையூடாகவே நம்மால் அறிய முடியும். அறிதல் என்பது வடிவத்தையும் தன்மைகளையும் இணைத்து இரத்தினச் சுருக்கமாக விளங்கிக் கொள்வதாகும். இந்த அறிதல் வழமைக்கு மாறான அழகுடையது, முழுமையானது, பூரணமானது. இது ஒருவர் பார்த்தலைவிட, கோட்பாட்டு பகுப்பாய்வைவிட, பிரச்சினையைத் தீர்த்தல் முறைமைகளைவிட வித்தியாசமாக உள்ளது. அதனால் நல்ல முறையில் விருத்தி செய்யப்பட வேண்டியதாகும். மனித வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் விரைந்து அறிதல் நிகழ்வதை ஒப்ஸ்பேண் ஏற்றுக்கொள்கிறார். கவின் கலைப் பணிகளிலும் இயற்கையிலும் இதனை பூரணமாக விருத்தி செய்ய சந்தர்ப்பம் உள்ளது என்கிறார் ஒப்ஸ்பேண்.

## 8. சமூகமும் அழகியலும்

சமூகத்தினது கல்வியாக கலை செயற்படுவது பற்றி மூன்று கருதுகோள்கள் இங்கே கலந்துரையாடப்பட்டன. பிளேட்டோவின் குடியரசு நூலில் சமநிலை உள்ள ஒன்றிணைந்த கல்விக்கு கலைக் கல்வி அவசியமானது என்று சோக்கிரட்டிஸ் குறிப்பிடுகிறார். கலையில் ஈடுபடல் உண்மை தன்மையுடன் இருத்தலையும் நன்நடத்தைக்கும் வழி வகுக்கும் என்று அவர் கருதினார். பிளெட்டோ தனது காலத்தில் இருந்த இலக்கியம், கவிதை, நாடகம் பிழையான பார்வையையும் பலவீன பாத்திரங்களையும் கொண்டிருந்ததால் அவற்றை மறுதலித்தார். (இராமானுச்சாரி, 1969) கலைக் கல்வியை வலியுறுத்திய மற்றொரு ஒழுக்கவாதி லீயோ ரிடால்ஸ்டாய் (Tolstoy) ஆவார். அவர் தனது கலை என்றால் என்ன? என்ற (What is Art) கட்டுரையில் சோபஷிஸ், சேக்ஸ்பியர், மைல்கல் அஞ்சலோ, பிதோவன் போன்ற கலைஞர்களையெல்லாம் மறுதலித்தார். அவர்கள் எல்லாம் உயர்ந்தோருக்கு மாத்திரம் பேசுகிறார்கள். கலை என்ன செய்ய வேண்டும் என்பதில் பிழைவிடுகின்றனர். அவர்கள் பொதுமக்களுக்கு கற்பிக்க தவறுகின்றனர் என்று அவர் கூறினார்.

அழகியல் கல்வி பற்றி ஒரு வித்தியாசமான பார்வையை ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஜேர்மன் கவிஞரும் தத்துவஞானியுமான பிரேடறிச் ஸ்சிச்சிலர் கொண்டிருந்தார். வடிவத்துக்கும் பொருளுக்கும் இடையே வைத்து அழகியலை அவர் அணுகினார். வடிவம் மனித வாழ்க்கையில் ஒழுக்கத்தின் தேவையையும் பகுத்துணர்தலையும் அதாவது உண்மையையும் கடமையையும் குறிக்கிறது (வெங்கடசாமி, 1982). சடத்துவ வாழ்க்கை நமது புலன் உணர்ச்சிகளின் தொடர்பில் உள்ளது என்றார்.

பிளேட்டோ, ஸ்சிலர், டால்ஸ்டாய் என்பவர்களைத் தொடர்ந்து ஹேர்பர்ட் ரீட் அழகியல் கல்வி அடிப்படையாக இருக்க வேண்டும் என்றார். வயது வந்தவர்கள் இல்லாமல் ஒழுக்க நெறியை வலியுறுத்த முடியாது. சிறுவர்களின் குழுச் செயற்பாடுகள் அழகியல் நாடகத்தில்

மையப்பட்டுள்ளதை நாங்கள் இயற்கையாக கொள்ள வேண்டும். நாடகங்களினுடாக அழகியலையும் ஒழுக்கத்தையும் இணைக்க ஸ்சிலர் முயன்று கொண்டிருக்கும் போது அண்மைக் கால எழுத்தாளர்கள் அறிதல் விசாரணையையும் தாக்கமான உணர்வையும் வலியுறுத்துகின்றனர் (ராமானுஜாசாரி, 1966).

## 9. அழகியல் கல்வி கற்பிப்பதிலுள்ள பிரச்சினைகளும் பயன்பாடுகளும்

நடைமுறைக் கல்வியிலும் மெய்யியலிலும் மற்றும் பொதுக் கல்வி திட்டத்திலும் அழகியலை ஒரு பாடமாக்கல் கவனத்தை ஈர்த்துள்ளது. இதற்கு காரணம் கணிதம் மற்றும் வாசிப்பு பாடங்களுக்கு நேரத்தை அதிகரிப்பதற்காக கல்வி நிர்வாகிகளும் கொள்கை வகுப்பாளர்களும் கலைப் பாடங்களுக்குரிய நேரத்தை குறைக்கின்றனர். இத்தப் போக்கை எதிர்ப்பவர்கள் கலைக் கல்வியின் உள்ளார்ந்த, வெளியார்ந்த மதிப்பை எடுத்துரைக்கின்றனர். ஏனையவர்களின் கருத்துப்படி கலைக் கல்வி கலை அல்லாத வேறு முக்கியத்துவத்தையும் கொண்டிருக்கிறது. அதாவது அது வாசிப்பு, கணிதம், வெளிச் சிந்தனை, சமூக நடத்தை, உணர்ச்சி சமநிலை, சுய கௌரவம் ஆகியவற்றையும் கலை விருத்தி செய்கிறது. இவற்றுக்கு அப்பாலும் அனுகூலங்கள் உள்ளன.

வின்னர் மற்றும் ஹொட்லேண்ட் (2000) செய்த அளவை சார் ஆய்வுகள் அழகியல் கல்வியால் சிறந்த சாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை நிருபிக்கின்றன. ஆயினும் இந்த சிறப்புகளை கலைக் கல்வி மூலம் மாத்திரந்தான் எய்தலாம் என்பதில்லை. பல மணித்தியாலங்கள் அழகியலைப் போதிப்பதிலும் ஒரு மணித்தியாலம் வாசிக்கச் செய்தல் மாணவர்களிடம் கூடிய பலனை ஏற்படுத்தலாம். அழகியல் திறமை உளவியல், ஒழுக்கவியல், ஆன்மீக, உணர்வை அதிகரிக்கும் என்பதை விவாதங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அவற்றை உணர்வதற்கு கலைப் படைப்புகள் சிறப்பாக உதவுகின்றன. உளவியல், ஒழுக்கவியல், ஆன்மீகம் போன்றவற்றை உள்ளுணர்ந்து அறிவதில் கலைப்படைப்பின் ஆற்றலை குறைத்து மதிப்பிட முடியாது. பெருங்கலைகள் இம்மைக்குரிய தன்மைகளுக்கு அப்பாற்பட்டனவாகும். அவை வாழ்க்கையின் நிறைவுக்கு உதவுகின்றது. பின்வருவன அழகியற் கல்வியின் பயன்பாடுகளாக உள்ளன:

1. அழகியல் உணர்வு மூலம் தனிமனித இருப்பினை நிலையுறுத்தல்
2. கலைகளின் வலிமை நேர்நிலையான மாற்றத்திற்கு மனிதனை இட்டுச் செல்லும்
3. மனிததொடர்புகள் அதிகரிக்கும்
4. பாடங்களை மகிழ்வுடன் செவிமடுக்க முடியும்
5. திறந்த வினாக்களை கேட்கும் ஆற்றல் அதிகரிக்கும்
6. புதிய ஆனபவங்களில் சிந்தனைகளை உருவாக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.
7. அக உணர்வினையும் மனவெழுச்சிகளையும் வெளிப்படுத்தும் ஆற்றல் அதிகரிக்கும் (ஜெயராசா.சபா, 2016 ).

## 10. விதந்துரைகள்

அழகியற் கல்வி முக்கிய அம்சங்களையெல்லாம் உள்ளடக்க முயல்கிறது. அது இலக்கியம், இசை, ஒவியம் ஆகிய மரபான கலைகளை மாத்திரம் கொண்டதாக இருக்ககூடாது. அது நாடகம், திரைப்படம் மற்றும் வெகுசன ஊடக வடிவங்களை கொண்டதாகவும் இருக்க வேண்டும். கலை மாதிரிகளை வரவேற்றலும் ஆற்றுப்படுத்தலும் அவற்றின் இயல்பு பற்றிய அறிவும் மதிப்பீடும் போன்றவற்றை அறிந்திருத்தல் அவசியமானதாகும். விருத்தி ஆய்வு சுட்டுவது போல் விருத்தியில் தொடர்ச்சி அவசியமாகும். (கிருஷ்ணராஜா.சோ. 1989),இதற்கு கலைப் பொருள்கள் பற்றிய அறிவு வேண்டும். பின்னர் படைப்பாக்கம், ஆற்றுகை, வரவேற்பு ஊடாக கலையின் வழமையான அளவு, வெளிப்படுத்தல், பிரதிபலிப்பு ஆகியவற்றை சிறுவர்கள் அறிந்து கொள்ளச்

செய்ய வேண்டும். நேரடி கலை ஈடுபாட்டை தொடர்ந்து அதில் சமஅளவான அறிவு அவசியமாகவுள்ளது. அதை தெளிவாக்கி பொதுமைப்படுத்தி கொள்ளல் வேண்டும். பின்னர் அமைப்புக்குள் அதை கொண்டு வரவேண்டும். நியாயப்படுத்தல், மறுதலையாக மூன்று வகை அறிவு மாதிரி அடிப்படையாக உள்ளது. அவை கலையை அறிந்து கொள்ளல், அதில் ஈடுபடல், அது எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளது என்பனவாகும்.

தீவிர நியாயப்படத்தல்கள் எங்கும் வியாபித்துள்ள அழகியல் தூண்டுதலுக்கு உதவுகிறது. காண்பியக் கலைகள், இசை, வெகுசன ஊடக கலைகள் ஆகியவை நுகர்வாளர் தேவையை திருப்திபடுத்துகின்றன. குழு அடையாளத்தை தவிர்க்கின்றன. எங்களது உணர்வை பாதிக்கின்ற வழிகளில் ஒன்று கலையாகும். இதனால் எங்கள் அடையாளத்தை வடிவமைப்பதில் பெரும்பங்கு வகிப்பவைகளில் ஒன்றாக கலை உள்ளது. நியாயத்தையும் பிரதிபலிப்பையும் பூரணப்படுத்த கூடியது அழகியலாகும். விமர்சன நயப்பும் நடுநிலை நோக்கும் ஒருவரின் தேர்வையும் ரசனையையும் வளர்த்தெடுக்கின்றன. பன்மைத்துவ உலகில் நல்ல தரமான கலைக்கான சாத்தியம் ஒரு கேள்வியாக உள்ளது. மேலும் அழகியல் மற்றும் கலை பற்றிய அறிவை மாற்றீடு செய்வதால் அவர்கள் நடுவர்களாக தங்களுக்கு தேவையான அறிவை பெற மாணவர்களுக்கு வழிகாட்ட முடியும். மேலும் உள்ளடக்கத்திலிருந்து செயற்பாட்டுக்கு மாற முடியும். கல்விச் செயற்பாட்டில் உள்ள கருத்து ஏற்கெனவே பெற்றுள்ள அறிவை சிறுவர்கள் பெற உதவுகிறது. மறுபுறம் கல்வியியலாளர்கள் நடுநிலையுடன் செயற்பட முடியாது. அவர்களின் பிரதான இலக்கு மாணவர்களை தூண்டுதலும் கலைகளிலும் அழகியலிலும் அவர்களை ஆர்வம் கொள்ள செய்தலுமாகும். அவர்களுக்கேற்ற சிறப்புரிமைகளை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கொடுத்தல் அவசியமாகும்.

## 11. முடிவுரை

அழகியற் கல்வியை இன்றைய யதார்த்தத்துக்கு பொருந்தக் கூடிய வகையில் கல்வி நடவடிக்கைகளை எவ்வாறு தகவமைத்து கொள்வது என்பது சவாலாகவேயுள்ளது. கல்வி மெய்யியலாளர்கள் பன்மைத்துவம், சார்பியல் வாதம், மிகைவெளிப்படுத்தல் என்பனவற்றை கைவிட்டுள்ளனர். எப்போதும் போல் இளையவர்கள் மனங்களிலிருந்து கலை உணர்வு நீக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு சேக்ஸ்பியர், பீதோவன், ரெம்பிராண்ட் போன்றவர்கள் வெறும் சிந்தனையாளர்கள் மட்டுமே. கலைக் கல்வி குறிப்பிட்ட பாடத்தில் மாத்திரமே கவனம் கொள்கிறது. அப்பாடத்தின் எல்லை கடந்து கலை முழுமையும் பார்க்க அதனால் முடிவதில்லை. மேலும் வகுப்பறையில் பாடத் தடைகளையும் மாணவர்களின் தொழில்நுட்ப அறிவையும் தாண்டி கலைச் செயற்பாடுகள் அதிகம் ஈடுபட வாய்ப்பில்லை. இதன் விளைவு வகுப்பறைச் செயற்பாடுகள நிகழ்காலக் கலை உலகத்தோடு அதிகம் தொடர்பு கொண்டதில்லை.

எல்லா இடத்திலும் கலை செயற்பாடுகளினுடாக கற்றல் நிகழ்கிறது. சமூக நிலையங்களில் சமூக கலைகள் கற்பிக்கப்படுகின்றன. இணைய வடிவத்தில் விமர்சனம் ஊடாக இலக்கிய முன்னெடுப்புகள் நடைபெறுகின்றன. இளைஞர்கள் ஒருவருக்கொருவர் இசை, நாடகம் போன்றவற்றில் வரும் புதிய நுட்பத்தை பகிர்ந்து கொள்கின்றனர். அதே நேரம் நூதன சாலைகள், திரைக்கூடங்கள், இசை விழாக்கள் என்பன உற்சாகமாக நடத்தப்படுகின்றன. பல வகை சந்தர்ப்பங்களில் பல வகை நோக்கங்களையும் செயற்பாடுகளையும் அழகியல் நிகழ்வுகளும் கலை வளர்ச்சியும் கொண்டுள்ளது. அதேநேரம் இயல் இசை நாடகம் போன்ற படைப்புக்களின் வேகம் குறைவடைந்து கொண்டு வருவதனை அவதானிக்கலாம். அழகியல் கல்வி பற்றிய சந்தர்பங்கள் நல்ல விளைவை கொண்டுவரமில்வில்லை அதேபோல் சகல சிறுவர்களுக்கும் கலையை கற்றுக் கொள்ள சந்தர்பங்களையோ ஏற்படுத்தவில்லை. கலை மற்றும் அழகியல் கல்வி பற்றிய தேவை இன்னும் தொடர்கிறது.

**உசாத்துணைகள்**

இந்திரன், த. (1998). *தமிழ் அழகியற் கலை பற்றிய கட்டுரைகள்.* சென்னை: தாமரைச் செல்வி பதிப்பகம்.

முருகரெத்தினம், மீ. (1992). *அழகியல்.* சென்னை: உலகத் தமிழ் ஆராச்சி நிறுவன வெளியீடு.

வெங்கடசாமி, (1982). *கலை வாழ்க்கை அனுபவம்.* சென்னை: மாணிக்கவாசகர் பதிப்பகம்.

ஞானக்குமாரன், நா. (2012). *மெய்யியல்* அறிமுகம். கொழும்பு: சேமமடு பதிப்பகம்.

கிருஷ்ணராஜா, சோ. (1989). விமர்சன மெய்யியல், யாழ்ப்பாணம்: நான் வெளியீடு.

கிருஷ்ணராஜா, சோ. (2011). *மெய்யியல் ஓர் அறிமுகம்.* கொழும்பு: குமரன் பதிப்பகம்.

ராமானுஜாசாரி, ஆர். (1966). *பிளேட்டோவின் குடியரசு*, சென்னை: சாகித்திய அக்கதெமி.

ஜெயராசா.சபாஈ (2016). சுமகாலக் கல்வி. கொழும்பு: சேமமடு பதிப்பகம்.

Beardsely.MC, (1982). *The aesthetic point of view*. Ithaca: Cornl. University Press.

Bell, C. (1987). *Art.* London: Allen and Unwin publication.

Bali, (1997). *Introduction to philosophy*, New Delhi: Sterling Publishers Pvt.

Corroll, N. (1999*). Philosophy of art*. London: Routledge press.

Carr, D. (2003). *Spiritual*, *moral and heroic*. London: Black Well.

Mackinnon, D.M. (1962). *A study of ethical theory*. New York: Collier Books.

Russell, B. (1972). *The problems of philosophy*. London: Oxford university press.

Enoch, S.S. (1993). *Elements of philosophy: An introduction*. New York: Mc Graw - Hill Inc.

Goodman, N. (1976). *Language of art*. India: Hackett.

Levinson, J. (2003). *Philosophical aesthetics: An overview*. Oxford: Oxford University Press.